உ
சிவமயம்



தர்மக்கேணியை பிறப்பிடமாகவும்,
பெரிய பளையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி பொன்னையா–அன்னலஷ்மி

அவர்களின்

# கற்பகப் பொற்பா மலர்

29-01-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தர்மக்கேணியை பிறப்பிடமாகவும்
பெரியபளையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

திருமதி **பொன்னையா-அன்னலஷ்மி**

அவர்களின்

# கற்பகப் பொற்பா மலர்

**29-01-2012**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பே வடிவமாய்
அகவாழ்வின் வழிகாட்டியாய்
என்புருக இன்சொல்
எமக்களித்து எம்மவரின்
குடும்பக் குலவிளக்காய்
சுடரொளியாய்ச் சுகம்தந்து
இன்று எம்மைப் பிரிந்து
இறைவன் தாள்சேர
ஏகினீர் விண்ணுலகு
உங்கள் பாதக் கமலங்களுக்கு
எங்கள் அன்புச் சமர்ப்பணம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

**கணவர்,**
**மக்கள்,**
**மருமக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் திருமதி

# பொன்னையா-அன்னலஷ்மி

தாய்மடி
12-06-1937

இறைமடி
28-12-2011

## திதிவெண்பா

கர ஆண்டு மார்கழித் திங்கள் திருவோணத்தில்
பொன்னாளாம் புதனன்று சதுர்த்தி நன்னாளில்
பொன்னையா-அன்னலஷ்மி இவ்வுலகு துறந்து
சிவபதமெய்தினாள் மனம் கனிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மா நிலத்தே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உவப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருள(ல்) வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி பொன்னையா-அன்னலஷ்மி அவர்களின் வாழ்க்கை வரலாறு



இலங்கைத் திருநாட்டின் பச்சைப் பசேலென விளங்கும் வன்னி மண்ணின் நெல் விளையும் பூமியான தர்மக்கேணியில் வாழ்ந்த மாணிக்கம்-[illegible] தம்பதிகளுக்கு கடைப் புத்திரியாக உதித்தவரே அன்னலஷ்மி ஆவார். இத்தோற்றம் நிகழ்ந்தது 1937ம் ஆண்டு என்க.

இவருடைய சகோதரர்களாக தங்கமுத்து, கனகரத்தினம், சேனாதிராசா, குமாரசாமி, முத்துத்தம்பி, நடராசா, நல்லதுரை ஆகியோரை அடையப்பெற்று உளம்நனி மகிழ்ந்தார்.

இவர் சிறுவயதில் கல்வி கேள்விகளில் மிக்கவராகவும், ஓர் உத்தமப் பெண்ணுக்குரிய அத்தனை குணங்களும் நிறையப் பெற்றவராகவும் விளங்கினார். இவர் மங்கைப் பருவம் எய்தியவேளை ***"இல்லறமல்லது நல்லறமன்று"*** என்னும் ஒளவைப் பிராட்டியார் வகுத்த இலக்கியத்துக்கு ஒரு இலக்கணம் அமைக்க அவாவினர் பெற்றோர். அவ்வூரிலே பிறந்த தாய் மாமனின் ஒரே மகனான வேலுப்பிள்ளை-பொன்னையாவாம் சைவப் பெருமகனுக்கு அன்னலஷ்மியை 1957ம் ஆண்டு கன்னிகாதானம் செய்து கொடுத்து பேருவகை பூத்தனர் அவர்தம் பெற்றோர். ***"கற்புடைய மகளிர்க்குக் கணவனே கண்கண்ட தெய்வம்"*** என்ற ஆன்றோர் வாக்கு உண்மையென நிறுவுவராயினர். தன் நாயகனைத் தெய்வமென வழிபட்டு அவருக்கான பணிவிடைகளை அன்புடன் புரிவாராயினர். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் தம்பதியர் இருவரும் மலரும் மணமும் போலவும், மணியும் ஒலியும்போலவும், அமிழ்தும் சுவையும் போலவும் இணைபிரியாது ஒத்த அன்பும், ஒத்த பண்பும், ஒத்த செயலுமுடையோராய் விளங்குவராயினர்.

இத்தம்பதியினர் இருவரும் மதனும் ரதியும்போல இல் லறப் பூங்காவில் உலாவரும் நாளில்..

***"மங்கல மென்ப மனைமாட்சி மற்று அதன்***

***நன்கலன் நன்மக்கட் பேறு"*** என்ற வள்ளுவன் தந்த இலக் கியத்துக்கு இலக்கணம் அமைப்பாராயினர். தமது மாட்சிமைமிக்க மணவாழ்க்கையை அலங்கரிக்கும் அணிகலன்களாக மூத்த மகனாக நாகநாதனையும், இரண்டாவது மகனாக லோகநாதனை யும், மூன்றாவது மகளாக லோகேஸ்வரியையும், நான்காவது மகளாக ஈஸ்வரியையும், ஐந்தாவது மகளாக ஜெகதீஸ்வரியை யும், ஆறாவது மகளாக பரமேஸ்வரியையும், ஏழாவது மகனாக குபேந்திரநாதனையும், கடைசியாக சண்முகநாதனையும்(அமரர்) பெற்று அன்புடனும் பண்புடனும் வளர்த்தனர். இப்பிள்ளைகளின் எதிர்கால வளமான வாழ்வுக்குரிய கல்வியையும், நல்லொழுக் கத்தையும் போதித்தனர்.

பருவகாலம் எய்தியதும் மணக்கோலம் காணவிரும்பிய பெற்றோர், தமது இரண்டாவது மகனான லோகநாதனுக்கு அக்காலத்தில் ***"தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது"*** எனும் முதுமொழியின் உண்மையை உணர்ந்து விவசாயத் தொழிலை மேற்கொண்டிருந்த கண்டாவளை நடராஜாவின் செல்ல மகளான மங்கையதிலகத்தை மனையாளாக்கி மனம்பெரிது உவந்தனர். இவ்விளம் தம்பதியினர் இல்லறமாகிய நல்லறத்தில் இணைந்து கிருத்திகா என்னும் அன்புச் செல்வத்தினை பெற்றனர்.

மூன்றாவது மகளான யோகேஸ்வரியை கைதடியைச் சேர்ந்த ஸ்ரீநிவாசன் என்பவருக்கு மணம் முடித்துக் கொடுத்து மேகலா, ஜெயசீலன் எனும் இரு பேரப்பிள்ளைகளை கண்டு இன்புற்றனர். பேரப்பிள்ளையாம் மேகலா மங்கைப் பருவமடைந்த தும் மயூரன் எனும் இளம் செம்மலுக்கு மணஞ்செய்து கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டியாக மயூரியையும் கண்டார்.

மகளான ஈஸ்வரி பருவ வயதை அடைந்ததும் எழுதுமட்டு வாளைச் சேர்ந்த ஸ்ரீராமச்சந்திரன் என்பவருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். இவர்களின் இல்லறத்தின் பயனாக கீர்த்திகன், ஆதித்தியன் என்னும் இரு பேரக் குழந்தைகளைப் பெற்று மகிழ்ந்தார்.

தனது ஐந்தாவது மகளாகிய ஜெகதீஸ்வரியை யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ராஜ்குமாருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். இவர் தனது கடைசி மகளான பரமேஸ்வரிக்கு வரணியூரைச் சேர்ந்த பாரீதரனை துணைவராக்கி, அவர்களின் இல்லறத்தின் பயனாக பாலரதன், பவிசாந்தன், பவிசன், அபிநயா ஆகிய பேரப்பிள்ளைகளைக் கண்டு இன்புற்றார்.

இவர் தமது பேரப்பிள்ளைகளை கண்ணும் கருத்துமாக வளர்ப்பதற்கும் மகளுக்கு உதவிக்காகவும் வாழ்வின் இறுதிக் காலத்தில் வரணியூரிலே கழித்தார். தன்னை அர்ப்பணித்து மகளுக்குரிய அனைத்து பணிவிடைகளையும் செய்து வந்தார்.

தனது ஆசை மகனான குபேந்திரநாதனை இந்துமாகடலில் இலங்கு நல்முத்தென விளங்கி நிற்பது இலங்காபுரி எனும் இணைய தீவாகும். அதன் வடபால் வளம்பல பெற்று இருப்பது யாழ்.குடாநாடு. இந்நாட்டை அழகுசெய்யும் அணிகலன்களாக அமைந்துள்ள பதிகளில் ஒன்றான பலாலியூரைச் சேர்ந்த இராசரத் தினத்தின் மகளான அகிலாண்டேஸ்வரியை மனையாளாக்கி மனம் உவந்தனர்.

இவர் தனது கொடிய நோயின் காரணமாக தற்காலிகமாக கொடிகாமத்தில் வசிக்கும் மகளான ஈஸ்வரியை நாடினார். இவர் தன் தாயை தானும் கணவரும் சேர்ந்து அல்லும் பகலும் கண் விழித்து இறுதிவரை அன்புடனும் பண்புடனும் கவனித்து வந் தார்கள்.

அன்னலஷ்மி தெய்வபக்தி மிக்கவராக, அறத்தி அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வந்தார். இவர் வாழ்நாள் முழுவதும் விரதம் நோன்புபவராகவும் விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னலஷ்மி அம்மையார் கொடிய நோயின் காரணமாக அல்லல்பட்டிருக்கும்போது தனது கனடாவாழ் மகனான லோகநாத னையும், மருமகளான திலகத்தையும் பார்ப்பதற்கு துடித்தார். கனடாவில் இருந்து அவசரமாக வந்தார்கள். இருந்தபோதும் இவரால் அவர்களின் பேச்சுக் குரலை மட்டுமே கேட்கமுடிந்தது. இத்துடன் அவர் தன் மூச்சை திடீரென்று 2011ம் ஆண்டு மார்கழித் திங்கள் 28ம் நாளில் பிள்ளையார் பெரும் கதை இறுதி விரத நாளில் நிறுத்தி, இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகெய் தினார். இவர் இன்னும் பலகாலம் எம்மத்தியில் வாழவிடாமல் கொடிய நோய் சதி செய்துவிட்டது. விதி வலிது என்பர். இதை வென்றோர் யாரும் இல்லை. இந்த உடம்பு நிலையற்றது. ***"காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா"*** என்னும் இந்த உடம்பின் நிலையாமையை வலியுறுத்தி மறைந்துள்ளார்கள் பல அறிஞர்கள். எனவே பிறந்தவர் யாராயினும் இறந்தேயாக வேண்டும். இது உலக நியதியாகிவிட்டது. இந்த நியதியைப் பின்பற்றியே எங்கள் அன்னலஷ்மி அம்மையாரும் இவ்வுலகில் தோன்றி தமக்கு வாழ்க்கைத் துணைவராகக் கிடைத்த பொன் னையா எனும் பெருமகனைத் தெய்வமாகப் பூஜித்து, அவருக் காகப் பணிவிடைகளை நிறைவுறச் செய்து, தமது அருமைப் பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும் வாழ்ந்துள்ளார். உறவினர்களுக்கும் வேண்டிய உதவிகளைப் புரிந்து பெறுதற்கரிய இம்மனிதப் பிறவி பெற்றதனால் பயன்களை நயத்து, ஒரு நிறைந்த பூரணமான வாழ்வு வாழ்ந்து மெல்ல மறைந்து விட்டார்.

அவரின் ஆத்மா பூரண சாந்தியடைவதற்கும், அவரின் பிரிவால் துக்க சாகரத்துள் அமிழ்ந்திருக்கும் அன்புப்பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் மனச்சாந்தி யடைவதற்கும் எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் பாலிப்பாராக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர் புலம்பல்

கூடிநின்று பெரியோர்கள் வாழ்த்துக்கூற
குனிந்து நின்ற விரலிணைந்து மாலையேற்று
தாமம் சூட்டி நாமத்தை மாற்றி
தக்கோர் முன்னிலையில் தங்க நாண் பூட்டி
நாடிவந்த என்னைப் பிரியேன் என்ற நாளை
பாவிநான் நினைத்துப் பார்க்கின்றேனே
பாராமுகமாகச் சென்றதேனோ?
தேடிவந்து உதவிய என் அன்பின் ஊற்றே
உன்னை வெந்தணலில் எரியவிட்டுவிட்டேன்
உருக்குலைந்து வாடுகின்றேன் என்செய்வேன்–நான்
இந்நாள் இது நடக்குமென யார் கண்டார்
எழுந்து நிதம் உன்பிரிவை எண்ணுகின்றேன்
நொந்த மனம் குளிர ஒரு பிறவிதனில்
மீண்டும் நாம் சேர்ந்துவாழ விதி கூட்டாதோ!

## பிள்ளைகள் துயரம்

பாசமிகு எம் அன்புத் தாயே
கண்ணை இமை காப்பதுபோல–நாம்
உன்னைக் காத்தோம்–ஆனால்
இன்று நீ தனிவழி சென்று விட்டாயே
எங்கேயோ நீ போனாயோ–போனாய் என்று
ஏங்கி அழுது புலம்புகின்றோம் அம்மா!

நேற்றுவரை நீ கதைத்த கதைகள்
எல்லாம் நெஞ்சத்தில் எதிரொலிக்கும் – அம்மா
நேற்றுவரை நீ எமக்கு செய்த
உதவி எல்லாம் நெஞ்சத்தில்
எதிரொலிக்கும் அம்மா! அம்மா!!
உனை இழந்த கவலையினால்
நெஞ்சம் உருகிப் புலம்புகின்றோம் அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

ஆசை மாமியே -உனைக்
கண்போல பாதுகாத்தோம்-எம்
பிள்ளைகளை உன் கண்ணுறக்கத்தையும்
பாராமல் வளர்த்து விட்டாய்
நாங்கள் எங்கு சென்றாலும் உன்
பொறுப்பில் எம் மனைவி
பிள்ளைகளை ஒப்படைத்து செல்வோம்-ஆனால்
இன்று எம்மை எல்லாம்
தவியாய்த் தவிக்கவிட்டு
சென்றுவிட்டாய் மாமியே!

## பேரப்பிள்ளைகள் ஏக்கம்

எம் அன்பின் அம்மம்மாவே!
உங்கள் பொன்னான உயிரை
பறிகொடுத்து விட்டு தவியாய்
தவிக்கின்றோம்-அம்மம்மா!
இரவு பகல் உறக்கத்தையும் மறந்து
எம்மை எல்லாம் பாராட்டி
சீராட்டி வளர்த்து விட்டாய்
நீ கூப்பிடும்போதெல்லாம்
ஓடோடி வந்து என்ன அம்மம்மா
என்றிடுவோம் - இன்று
எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாயே-இனி
எப்போ உன்னைக் காண்போம்
எம் அம்மம்மாவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டி புலம்பல்

என் அன்புப் பாட்டியே
நான் கனடாவில் இருந்து உனைப்
பார்க்க ஓடோடி வந்தபோது
உன் மூத்த பூட்டி என்று
என்னை அணைத்து
பூட்டி ..... பூட்டி ...... என
என் கைகளைக் கொஞ்சி
பாசத்துடன் தடவினாய் பாட்டி
நான் கனடா போனதும்
எல்லோரையும் தவியாய் தவிக்கவிட்டு
தனியாய்ச் சென்றுவிட்டாய் பாட்டி
என்னைப் பார்ப்பதற்கா இத்தனை நாளும்
காத்திருந்தாய் அன்புப் பாட்டியே!

## கண்ணீர்த் துளிகள்

ஆசை மாமியே ...!
உங்களுக்கு மாறா நோய்
வந்துவிட்டதால்
எம்மையெல்லாம் தவியாய்
தவிக்கவிட்டு சென்றதேனோ மாமியே!
நான் உன் மூத்த மருமகளானதலால்
உன் பிள்ளைபோல பாதுகாத்து
வெளிநாடு அனுப்பிவிட்டாய் – இன்று
உனை மாறாத நோய் ஒன்று
வாட்டியது என்று அறிந்து
உனைப் பார்க்க ஓடோடி வந்தேனே
என் மாமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனைப் பார்த்ததும்
எனைவிட்டு சென்றதேனோ
எனைப் பார்க்கவா இத்தனை
நாளாய் காத்திருந்தாய்
என் அன்பு மாமியே!
நான் இனி யாரை
மாமி என்றழைக்க..?

-கனடா மருமகள்-

## இனி எங்கே காண்பேன்.....?

என் அன்பு மாமியே!
உங்கள் சிரித்த முகத்தை-இனி
எங்கே காண்பேனோ
உங்கள் அன்பு வார்த்தையை
எங்கே கேட்பேனோ!
மருமகளைத் தேடி
பாசத்துடன் ஓடி வருவாயே
மாமியின் அன்பு முகம் காணாது
பாசமருமகள் தவிக்கின்றேன்
நோயின் நொடியின்
இறுதி நேரத்தில்
என் பெயர் கூறி
அழைத்தீர்களே மாமி!
மாமியின் அன்பு வார்த்தையை
நான் இனி எங்கு கேட்பேன்
இங்குநான் துடிக்கின்றேன் மாமியே!

-ஆசை மருமகள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

- ☞ சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் – அது இதயத்தின் ஓசை.
- ☞ சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள் – அது சக்தியின் பிறப்பிடம்.
- ☞ விளையாட நேரம் ஒதுக்குங்கள் – அது இளமையின் இரகசியம்.
- ☞ படிக்க நேரம் ஒதுக்குங்கள் – அது அறிவின் ஊற்று.
- ☞ நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள் – அது மகிழ்ச்சிக்கு வழி.
- ☞ உழைக்க நேரம் ஒதுக்குங்கள் – அது வெற்றியின் வழி.

## இரண்டால் அறிவுபெற......

- ❁ வருவதும் போவதும் இரண்டு – இன்பம், துன்பம்
- ❁ வந்தால் போகாதது இரண்டு – புகழ், பழி
- ❁ போனால் வராதது இரண்டு – மானம் , உயிர்
- ❁ தானாக வருவது இரண்டு – இளமை, மூப்பு
- ❁ நம்முடன் வருவது இரண்டு – பாவம், புண்ணியம்
- ❁ அடக்க முடியாதது இரண்டு – ஆசை, துக்கம்
- ❁ தவிர்க்க முடியாதது இரண்டு – பசி, தாகம்
- ❁ பிரிக்க முடியாதது இரண்டு – பந்தம், பாசம்
- ❁ அழிவைத் தருவது இரண்டு – பொறாமை, கோபம்
- ❁ எல்லோருக்கும் சமமானது இரண்டு – பிறப்பு, இறப்பு

## மூன்றால் முன்னேற......

- ⌖ தவிர்க்க வேண்டியது மூன்று – புகைத்தல்,குடித்தல், சூதாடல்.
- ⌖ அடக்க வேண்டியது மூன்று – நாக்கு, கோபம், ஆசை
- ⌖ ஒழிக்க வேண்டியது மூன்று – திருட்டு, பொய், சோம்பல்
- ⌖ காக்க வேண்டியது மூன்று – வாக்குறுதி, நட்பு, அன்பு
- ⌖ மதிக்க வேண்டியது மூன்று – முதியோர், மார்க்கம், சட்டம்
- ⌖ போற்ற வேண்டியது மூன்று – தைரியம்,மனமகிழ்ச்சி, திருப்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*



# கந்தஷஷ்டி கவசம்

*திருச்சிற்றம்பலம்*

**காப்பு**

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பாலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள்வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செயும் மயில்வா கனனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருக! வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிர்ஐங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருகில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோ தனென்று

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றனை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர் வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரன்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்ரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய வேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க பார்க்க பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படு மன்னரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்,
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப்பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும்அஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடனி றங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரஹண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு முருகா! அமராபதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!

கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமரா !
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா!
சமராபுரிவாழ் சண்முகத்தரசே!

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யான்னுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமுடன்யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடனிரஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத்தாக வேலாயுதனார்

சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குருவாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்

வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனையடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பதுன் கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியமளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர்ஷஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடனொரு நினைவது வாகிக்
கந்தர்ஷஷ்டி கவசமிதனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீறணிய
அஷ்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்

மாற்றவரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மையளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாவாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லதோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத் தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாதிபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமிகு திவ்விய தேகாபோற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தாபோற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக் கோரரசே

மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

முற்றும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
சிவபதமடைந்த அன்னலஷ்மி அவர்கள்
நோயுற்றபோது அருகிருந்து உதவியவர்களுக்கும்,
அவரது மறைவின்போது நேரில் வந்து
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலை
பேசிமூலம் எமக்கு ஆறுதல்கூறி துக்கத்தில்
பங்குகொண்ட அன்பு உள்ளங்களுக்கும்,
இறுதிக் கிரியைகளில் முன்னின்று பங்க
ளித்த உற்றார், உறவினர். நண்பர்
களுக்கும், இறுதிக் கிரியைகளை



நடத்திய அந்தணருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம்
வெளியிட்ட உள்ளங்களுக்கும், ஆத்ம சாந்திக்காக
பிரார்த்தனை புரிந்தோருக்கும், தேவையானபோதெல்லாம்
உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும், இம்மலரினை
அச்சிட்டு உதவிய சமாசப் பதிப்பகத்தினருக்கும் மற்றும்
யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கணவர், மக்கள், மருமக்கள்**

**மடத்தடி, கொடிகாமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச வி

மாணிக்கம் + வள்ளிப்பிள்ளை(அம


- தங்கமுத்து (அமரர்) + வீரசிங்கம் (அமரர்)
  - கணேசமூர்த்தி (கனடா)
  - சரஸ்வதி
  - சிவபாக்கியம் (கனடா)
  - குலவீரசிங்கம் (கனடா)
  - சிற்றம்பலம் (கனடா)
  - கிருபாமூர்த்தி (கனடா)
  - கனகம்மா (கனடா)
  - அன்னலஷ்மி (கனடா)
  - இராஜலஷ்மி (கனடா)
- சேனாதிராசா (அமரர்)
- கனகரட்ணம் (அமரர்) + செல்லமுத்து
  - சத்தியபாமா
  - கோமளபாமா
  - கிருபநாயகம்
  - ரூபாபாமா
  - தவபாமா
  - உதயநாயகம்
  - காந்தீபன்
- முத்துத்தம்பி + சிவயோகம்
  - விமலாதேவி
  - சாந்தாதேவி
  - கருணாகரன்
  - மஞ்சுளாதேவி
- குமாரசாமி (அமரர்) + இராசம்மா

---

- நாகநாதன்
- லோகநாதன்(கனடா) + மங்கையதிலகம்(கனடா)
  - கிருத்திகா(கனடா)
- யோகேஸ்வரி + ஸ்ரீநிவாசன்
  - மேகலா + மயூரன்
    - மயூரி
  - ஜெயசீலன்
- ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org